9th September 1970]

திரு. ஜி. சுவாமிநாதன் : மேற்பார்வைப் பொறியாளர் பதவி போன்ற மிகப் பொறுப்பு வாய்ந்த பதவிகள் கிட்டத்தட்ட 6, 7 மாதங்களாக நிரப்பப்படாமலிருப்பதற்கு என்ன காரணம் ? இது போன்று காலியாகும் பெரிய பதவிகளை உடனடியாக நிரப்ப இனியாவது அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, நிர்வாகக் காரணங்கள்தான் கால தாமதத்திற்குக் காரணம். ஆனால் இந்தப் பதவியைப் பொறுத்த வரையில் ''அடிஷனல் சார்ஜ் அரேன்ஜ்மெண்ட்'' செய்து பார்த்து வரப்பட்டது. இப்போது அந்த ஸ்தானங்களையெல்லாம் உடனடியாக நிரப்பியிருக்கிறோம்.

திரு. கே. ராஜாராம் : இனிமேலாயினும் இம்மாதிரிப் பதவிகளில் ''வேகன்சி' ஏற்படும் சமயத்தில், அடுத்த சீனியர் டிவிஷனல் என்ஜினீயரையே சூப்பரண்டிங் என்ஜினீயராக நியமித்து, வேலைகளைத் தொடர்ந்து செய்வதற்கு உரிய முறையில், அந்தப் பதவிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்தாவது, அரசு ஏற்பாடு செய்ய முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : அடுத்து இருக்கிற சீனியர் என்ஜினீயரைப் போட்டு அந்த இடத்தை நிரப்ப முடியாது. காரணம் அதற்காக ஒரு 'பேனல்' தயார் செய்ய வேண்டும். 'பேனல்' தயார் செய்த பிறகு, அதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். பரிசீலனைக்குப் பிறகுதான் அரசாங்கம் அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இதையெல்லாம் கவனித்துத்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இனிமேலும் எடுத்துக்கொள்ளும் என்று உறுதியாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Bridge across the Coleroon

*98. *Q.*—THIRU T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the designs and estimates for the bridge which is being constructed across the Coleroon near Thirumanur village in Trichy district were prepared by the Government Engineers or by the contractors ;

(*b*) the number of spans on the bridge and height and the width of the bridge ; and

(*c*) the total estimate of expenditure ?

கொள்ளிட நதியின் குறுக்கே கட்டப்படும் பாலம்

திரு. டி. கே. சுப்பையா : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருச்சி மாவட்டம் திருமானூர் கிராமத்திற்கு அருகில் கொள்ளிட நதியின் குறுக்கே கட்டப்படும் பாலத்திற்கு டிசைனும் மதிப்பீடும் தயாரித்தவர்கள் அரசாங்கப் பொறியாளர்களா அல்லது ஒப்பந்தக்காரரா ?

(இ) பாலத்தின் தூண்கள் எத்தனை ? உயரம் எத்தனை ? மேல் பரப்பின் அகலம் என்ன ?

(உ) மொத்த மதிப்பீடு தொகை எவ்வளவு ?

[9th September 1970

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) பாலம் சட்டும் வேலைக்குரிய அமைப்பு வரைபடமும், செலவு மதிப்பீடும் துறையால் தயாரிக்கப்பட்டன ; ஒப்பந்தக்காரரிடமிருந்து பெறப்பட்ட மாற்று அமைப்பு வரைபடம் மிகவும் சிக்கனமானது என்று தெரிந்ததால், அது ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றுவதற்காக எடுத்துக்கொள்ளப் பட்டது.

(இ) பாலத்தில் 23 முக்கியக் கண்கள் அமைந்திருக்கும். ஒவ் வொரு முக்கியக் கண்ணுக்குமிடையே 150 அடி 3 அங்குலம் இருக்கும். முக்கியக் கண்களுக்கு இடையில், ஒவ்வொன்றும் 12 அடி இடைவெளி உடைய 22 தொங்கு பிடிமானங்கள் இருக்கும். பாலத்தின் உயரம் 18.47 அடி ஆகும். பால ஓரங்களுக்கிடையில் உள்ள சாலை அகலம் 24 அடி ஆகும்.

(உ) மொத்தச் செலவு மதிப்பீடு ரூபாய் 55.62 லட்சம் ஆகும்.

திரு. டி. கே. சுப்பையா : அரசாங்கப் பொறியாளர்களால் ஏற் கெனவே இந்த மூடுபாலம் அமைக்கத் தயாரிக்கப்பட்ட எஸ்டிமேட் தொகை எவ்வளவு ? இப்போது ஒப்பந்தக்காரர்கள் கொடுத்த 'டிசைன்' படியாகும் தொகையின் மதிப்பீடு எவ்வளவு ? இதற்கும் அதற்கும் உள்ள தாரதம்யம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, இந்தப் பாலத்திற்கான மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 55.62 லட்சம். ஒரு திட்டத்தைக் குறித்த டெண்டர் கேட்கிறபோது, அதற்கான 'ஆல்டர்னேடிவ் டிசைனும்' கோரப்படுகிறது. அந்த டிசைனும் அரசாங்கத்தால் பரிசீலிக்கப்படுகிறது. ஆனால் இந்தப் பாலத்தைப் பொறுத்த வரையில், 'பெட் லெவல் காஸ்வே அல்லது ஹை லெவல் காஸ்வே' என்பனவற்றில் எதைப் போடலாம் என்று பரிசீலித்து 'ஹைலெவல் காஸ்வே' போடுவதே 'எகனமிக்காக' இருக்கும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டதாலும், மாற்று டிசைன் ஒப்புக் கொள்ளக்கூடியதாக இருந்த காரணத்தாலும், அது ஒப்புக்கொள்ளப் பட்டு இப்போது வேலைகள் நடந்து வருகின்றன.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : 'டிசைன்' போடுகிற வேலையைச் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் செய்வதோடு மாற்று 'டிசைன்' போட காண்ட்ராக்டர்களிடம் ஒப்படைக்கிற வழக்கம், எல்லாத் திட்டங் களுக்குமான 'டிசைன்' போடும்போதும் கையாளப்படுகிறதா ? அப் படிச் செய்வது நமக்குத் தேவைதானா ? நமது நிர்வாகத்திற்கு அது அனுகூலமாக இருக்குமா ? அப்படிச் செய்வது அவசியமாக இருந்தா லும், அந்த மாற்று டிசைனை நமது மற்றொரு என்ஜினீயரைக் கொண்டே தயாரிப்பது குறித்து அரசாங்கம் யோசிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : இவ்வளவு பெரிய திட்டத்தை நிறைவேற்றும்போது, பொதுப் பணித் துறையைச் சார்ந்த பொறியாளர்களே இதற்கான டிசைன்களைத் தயாரிக்கிறார்கள். அதே நேரத்தில் அனுபவமிக்க காண்ட்ராக்டர்கள்கூட மாற்று 'டிசைன்'

கொடுக்கலாம் என்று டெண்டரில் கோரப்படுகிறது. அப்படி அவர்கள் மாற்று டிசைன் கொடுத்தால், அதையும் நம் அதிகாரிகள் பரிசீலிக்கிறார்கள். அவர்கள் தான் அதையும் பரிசீலித்து முடிவு செய்கிறார்கள். இங்கே என்னிடம் சரியான குறிப்பு இல்லை. எனக்குச் சரியாக நினைவிருந்தால், 25 லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட டெண்டர்களுக்கு அப்படிப்பட்ட மாற்று 'டிசைன்' கொடுக்கலாம் என்றிருப்பதாக நினைக்கிறேன். சில நேரங்களில் அவர்கள் கொடுக்கிற மாற்றுத் திட்டங்கள் நன்மை பயக்கக்கூடியதாகவும், டெண்டர் தொகை குறைவாகவும் இருக்கும்போது அரசு அதை ஒப்புக்கொள்கிறது.

திரு. டி. கே. சுப்பையா : இப்போது ஒப்பந்தக்காரர் கொடுத்த 'டிசைன்' ஹை லெவல் பிரிட்ஜுக்குத்தானா அல்லது ஏற்கெனவே நமது மராமத்து இலாக்கா பொறியாளர்கள் கொடுத்த பெட் லெவல் அமைப்புக்குத்தானா? இப்போது எந்த அமைப்புப்படி பாலம் அமைகிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : நம்முடைய பொதுப் பணித் துறையினர் பெட் லெவல் காஸ்வேயிக்கும், ஹை லெவல் காஸ்வேயிக்கும் 'டிசைன்' கொடுத்தார்கள். The alternative design submitted by Messrs. Neelakantan Brothers for high level bridge at a cost of Rs. 50.82 lakhs was accepted. ஆக இப்போது 50.82 லட்சம் ரூபாய்க்கான மாற்று டிசைனை ஒப்புக் கொண்டிருக்கிறோம். வேலைகளும் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் பலன் அடைவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : மாற்று டிசைன் கொடுக்கிற தயாரிப்பாளர்களும், கண்ட்ராக்டர்களும் எதாவது அரசாங்கத்திலிருந்து ஊதியம் பெறுகிறார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : அதற்காகத் தனி ஊதியம் எதுவும் தரப்படுவதில்லை. ஆனாலும் இதன்மூலம் என்ஜினீயர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுகிறது. காண்ட்ராக்டர்கள் மாற்று 'டிசைன்' தயாரிப்பதற்காக என்ஜினீயர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ள வேண்டியிருக்கிறது.

Desilting unit

*99. *Q.*—THIRU T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether there is any separate desilting unit for repairing the silted tanks and ponds ;

(*b*) if so, the persons in charge of its administration ;

(*c*) the number of dredgers available for this purpose ; and

(*d*) the places where this work has been completed from 1-4-1968 to 31-3-1970 ?